# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 331/2022**

Prosecution witness : 4

| | | | |
|---|---|---|---|
| Name: | வீரதேவஜாட்டி | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A1 to A3 produced. A4 produced through V.C. A5 present.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 23.10.2024**

**முதல் விசாரணை**:

நான் தற்போது துாத்துக்குடி போதைப்பொருள் நுண்ணறிவுப்பிரிவில் சிறப்பு உதவியாளராக பணிபுரிந்துவருகிறேன். துாத்துக்குடி போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு குற்ற எண் 18/2021, ச/பி, 8 (c) r/w 20(b)(ii)(C) 29(1) and 25 NDPS Act 1985 வழக்கின் 5 வது தலைமறைவு எதிரி-சுரேஷ் என்பவரை பற்றி கடந்த 12.01.2022 ம் தேதி காலை துாத்துக்குடி போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு காவல் ஆய்வாளர்-சித்ராவுக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி அலுவலகத்தில் ஆஜரில் இருந்த என்னையும், தலைமைக்காவலர்-முருகன் என்பவரையும் அழைத்துக்கொண்டு கீழவைப்பாருக்கு சுமார் ஒன்றரை கிலோமீட்டருக்கு வடக்கே உள்ள வெள்ளப்பாலத்திற்கு அருகில் 9.00 மணிக்கு சென்று கண்காணித்தபோது 9.15 மணிக்கு அங்கு நின்றுகொண்டிருந்த வழக்கின் 5 வது எதிரி-சுரேஷ், வயது-41, த/பெ.தோமஸ்வில்வராயர், 1/81 பழைய காலனி தெரு, கிழவைப்பார், துாத்துக்குடி என்பவரை ஆய்வாளர் அவர்கள்

கைது செய்தார். மேற்படி இடமானது ஆள் நடமாட்டம் இல்லாத காரணத்தால் தனி நபர் சாட்சிகள் எவரும் இல்லாத காரணத்தால் போலீஸ்சாட்சியான எனது முன்பும், என்னுடன் வந்த தலைமைக்காவலர்-முருகன் முன்பும் ஆய்வாளர் அவர்கள் 5ம் எதிரியான சுரேஷ் என்பவரை விசாரிக்க அவர் எவ்வித துன்புறுத்தலும், அச்சுறுத்தலும் இன்றி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 9.30 முதல் 10.30 வரை ஆய்வாளர் அவர்கள் பதிவு செய்தார்கள். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் தலைமைக்காவலர்-முருகன் என்பவரும் கையொப்பம் செய்தோம். எதிரி-சுரேஷ் கையொப்பம் செய்தார். ஆய்வாளர் அவர்களும் கையொப்பம் செய்தார். பின்னர் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி அவர் அணிந்திருந்த டீசெர்ட் பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த சிம்கார்டுடன் கூடிய கிரேகலர் செல்போனை எங்கள் முன்பு ஆய்வாளர் அவர்கள் 10.30 முதல் 11.15 வரை அத்தாட்சி மூலம் கைப்பற்றினார்கள். மேற்படி அத்தாட்சியில் நானும், தலைமைக்காவலர்-முருகன் என்பவரும் கையொப்பம் செய்தோம், எதிரி சுரேஷ் என்பவரும் கையொப்பம் செய்தார். காவல் ஆய்வாளர் அவர்களும் கையொப்பம் செய்தார்கள். பின்னர் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி சம்பவத்திற்கு பயன்படுத்தியதாக பைபர்போட்டை அடையாளம் காட்டுவதாக கூறியிருந்ததில் அவரை அழைத்துக்கொண்டு கீழவைப்பார் கடற்கரைக்கு சென்று அங்கு நிறுத்தியிருந்த சுமார் 150 பைபர் போட்டுகளை 11.00 மணி முதல் 12.00 மணி வரை பார்த்தும் தன்னால் அடையாளம் காட்டமுடியவில்லை என்று சொன்னதன் பேரில் அவரை தூத்துக்குடி நுண்ணறிவுப்பிரிவு அலுவலகத்திற்கு கொண்டுசென்று எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்ப உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். 5வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சிக் கையொப்பம் என்னுடையதுதான் அது அ.சா.ஆ.10 ஆகும்.

<u>1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

08.10.2021 ம் தேதி காவல்நிலையத்தில் நடந்த விபரங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அன்று நடந்த சம்பவம் குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தாரா என்றால் விசாரிக்கவில்லை. இந்த வழக்கில் நான் நீதிமன்றத்தில் சொன்ன சாட்சியத்தை தவிர மற்ற விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கீழவைப்பார்,விளாத்திகுளத்திலிருந்து எவ்வளவு தூரம் என்றால் கீழவைப்பார், தூத்துக்குடி, கிழக்கு கடற்கரை சாலையில் உள்ளது. நான் நேரடியாக காவல்நிலையத்திலிருந்துதான் கீழவைப்பாருக்கு சென்றேனா என்றால் ஆம். கீழவைப்பார் என்பது ஆள்நடமாட்டம் உள்ள இடமா என்றால் போக்குவரத்து அதிகம் இருக்காது. அங்கிருந்த போட்டுகளை எல்லாம் நின்று பார்த்தோம் அடையாளம் காணமுடியவில்லை. கீழவைப்பார் என்பது தருவைக்குளத்திலிருந்து எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 15 கிலோமீட்டர் தூரம் இருக்கும். அங்கு வேலையை முடித்து எதிரியை காவல் நிலையம் அழைத்து சென்றோமா என்றால் ஆம் காவல்நிலையம் அழைத்து சென்றோம். நாங்கள் காவல்நிலையம் செல்லும்போது எத்தனை மணியிருக்கும் என்றால் 2.00 மணியிலிருந்து 2 1/2 மணி இருக்கும். நான் காவல்நிலையத்தில் இருக்கும் சிறப்பு உதவியாளர் என்பதால் என்னை சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்றாலும், அதன் அடிப்படையில் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி ஆவணங்கள் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கீழவைப்பாரிலும் மீன்பிடிதொழில் பிராதானமானதொழில் என்றால் சரிதான். மேற்படி கீழவைப்பாரில் மீன் பிடிப்பவர்களும், மீன் வாங்குபவர்களும், உள்ளுர் வாசிகளும் அதிக அளவில் வந்து செல்வார்கள் என்றால் சரிதான். காலை நேரம் என்பதால் குடியிருப்பு மற்றும்

ஜனநடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரியல்ல. பைபர் போட் நிற்கும் இடத்தில் அதிக அளவில் மீன்பிடிப்பர்கள் நடமாட்டம் அங்கு உண்டு என்றால் சரிதான். நான் சொன்னபடி சொன்ன நேரத்தில் சொன்ன இடத்திற்கு செல்லவில்லை என்றும் என் முன்பு எந்த ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும் வழக்கிற்கு ஏற்ப ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்யப்பட்டு அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னை இந்த வழக்கு சம்பந்தமாக போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு காவல் ஆய்வாளர் எங்கு, எத்தனை மணிக்கு விசாரித்தார் என்றால் 12.01.2022 ம் தேதி வெள்ளைப்பாலம் அருகில் வைத்து விசாரித்ததை தவிர வேறு நாளில் விசாரிக்கவில்லை. என்னை காவல் ஆய்வாளர் நண்பகலில் விசாரணை செய்தார்.

**<u>3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

**<u>4 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2 ம் எதிரிதரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்வதாக கூறப்பட்டது.

**<u>5 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ரகசிய தகவல் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் எனக்கு தெரியாது. ஆய்வாளருக்குத்தான் தெரியும். 5 ம் எதிரியை யார் சோதனை செய்தார்கள் என்றால் ஆய்வாளர் சோதனை செய்தார் நாங்கள் அவருடன் சென்றோம். ஆய்வாளர் சோதனை சம்மத கடிதம் எதுவும் தயாரித்தாரா என்றால் தயாரிக்கவில்லை. 5 ம் எதிரியிடமிருந்து போதைப்பொருள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் கைப்பற்றப்படவில்லை. 5 ம் எதிரியை கைது செய்து அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதாக சொல்வதுகுறித்து என்னிடம் ஆய்வாளர் விசாரணை வாக்குமூலம் எதுவும் பெற்றாரா என்றால் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். இந்த வழககின் ஆய்வாளர் இந்த வழக்கு சம்பந்தமாக சொன்ன நேரத்தில், சொன்ன

இடத்தில் வைத்து விசாரணை செய்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றாலும் அப்படி பதிவு செய்திருந்தால் அது நீதிமன்றத்தில் முறையாக தாக்கல் செய்யப்பட்டிருக்கும் என்றாலும் சரியல்ல. சொன்ன நேரத்தில் ஆய்வாளருக்கு எந்த தகவலும் வரவில்லை என்றாலும், சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் சம்பவ இடத்தில் வைத்து எதிரியை கைதுசெய்யவில்லை என்றாலும், எதிரியிடமிருந்து எந்தவித ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றாலும் சரியல்ல. ஆய்வாளர் கொடுத்த பொய்யான வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 5ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட செல்போனுக்கும் எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் சொல்வதைபோல் 5ம் எதிரி குற்றசம்பவத்திற்காக ஒரு பைபர்போட் பயன்படுத்தியதாகவும், அதை தேடி போனதாக சொல்வதும் பொய் என்று சொன்னால் சரியல்ல. 5வது எதிரி அப்படிஒரு போட்டை பயன்படுத்தியிருக்கும் பட்சத்தில் அதை எளிதாக, முறையாக கைப்பற்றி யிருக்கலாம். அப்படி ஒரு சம்பவம் நடக்கவில்லை என்பதால் தான் அதை சமாளிக்கும் விதமாக பைபர்போட்டை தேடியதாகவும், அது கிடைக்கவில்லை என்றும் வழக்கு ஜோடிக்கப்பட்டு அதை அனுசரித்து நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை.**</u>